**கூடுதல் உதவி அமர்வுநீதிமன்றம், மேட்டுப்பாளையம்,**

**முன்னிலை: திரு. K. பழனிவேல் B.L**

**உதவிஅமர்வு நீதிபதி, மேட்டுப்பாளையம் .**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன்கிழமை**

**குற்றவியல்பல்வகைமனு 2/2025**

**அமர்வு வழக்கு எண் 216/2023**

1). திரு. மணிகண்டன், (A3) த/பெ. பட்டி

2) திரு. ரவிகுமார், (A8), த/பெ. திரு. ராஜேந்திரன்

3). திரு. நாகராஜ் (A1) த/பெ. பழனிச்சாமி

4). திரு. அருண்குமார் (A2), த/பெ. நஞ்சன்

5). திரு. ஹரிமன்னன் (A5), த/பெ. நடராஜ்

6). திருமதி. மாலதி (A6), த/பெ. பார்த்திபன் **....மனுதாரர்கள் / எதிரிகள்**

***- எதிர் -***

காவல் ஆய்வாளர் அவர்கள்,

மேட்டுப்பாளையம் காவல் நிலையம் **... எதிர்மனுதாரர் / புகார்தாரர்**

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பு 27.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் / எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. கலையரசு, அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் கூடுதல் அரசு வழக்குரைஞர் அவர்கள் முன்னிலையாகியும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## உத்தரவு

01). இம்மனுவானது குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231(2)- ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***02). மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :-***

கடந்த 04.05.2019 அன்று பாதுகாவல் பணியில் இருந்த காவலர்களை தாக்கியதாக மனுதாரர்கள்/எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட குற்ற வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் பட்டியலில் 12 சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட சாட்சிகளிலிருந்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ள அனைத்து சாட்சிகளும் காவல்துறையை சார்ந்தவர்கள். மேலும், அனைத்து சாட்சிகளின் முதன்மை விசாரணை முடிவுறும் வரை குறுக்கு விசாரணை செய்வதை ஒத்தி வைக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***03). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:-***

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் குறுக்கு விசாரணையின் போது தெளிவாக சாட்சியம் அளிக்க கூடாது என்ற தீய நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது இம்மனு சட்ட நடைமுறைகளுக்கு எதிரானது. குற்றமுறையீட்டாளருக்கு வீண் அலைக்கழிப்பையும், பொருளாதர நட்டத்தையும் ஏற்படுத்துவதற்காக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

04). இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

05). மனுதாரர்கள்/ எதிரிகள் மற்றும் எதிர்மனுதாரர்/ புகார்தாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவோ, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை.

***06). தீர்வு:-***

இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் / எதிரிகள் மீது இவ்வழக்கில் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 னை முதல் விசாரணை செய்யப்பட்டும் மனுதாரர்கள்/ எதிரிகளால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பது இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

07). இந்த வழக்கானது மேட்டுப்பாளையம் நீதித்துறை நடுவர் நீதி மன்றத்தில் முதல்நிலை பதிவு வழக்கு 2/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கோயமுத்தூர் முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டு அங்கிருந்து இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, சாட்சிகள் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

08). இந்நிலையில், மனுதாரர்கள்/ எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் மற்ற கண்ணுற்ற சாட்சிகளை விசாரணை செய்யும் வரை அ.சா.1 முதல் அ.சா. 3 ன் குறுக்கு விசாரணை செய்வதை ஒத்தி வைக்க வேண்டும் என மனு தாக்கல் செய்து வாதிட்டார்.

09). அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் அவருடைய வாதத்தில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 குறுக்கு விசாரணையின் போது தெளிவாக சாட்சியம் அளிக்க

கூடாது என்ற தீய நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனு சட்ட நடைமுறைகளுக்கு எதிரானது என்றும் குற்றமுறையீட்டாளருக்கு வீண் அலைக்கழிப்பையும், பொருளாதர நட்டத்தையும் ஏற்படுத்துவதற்காக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்து வாதிட்டார்.

10). மேற்கண்ட இரு தரப்பு வாதுரைகளையும், வழக்கு ஆவணங்களையும் நன்கு கவனமாக பரிசீலனை செய்ததில், அரசு தரப்பில் அ.சா.1 கடந்த 14.06.2024 அன்றும், அ.சா.2 மற்றும் அ.சா.3 கடந்த 20.08.2025 அன்றும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் மேலும், அ.சா.1 முதல் அ.சா.3 னை மனுதாரர்கள் / எதிரிகள் தரப்பினரால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பதும் புலனாகிறது. இந்நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

11). மேலும், பாரதிய நாகரீக சுரக்ஷா சங்கீதா பிரிவு 254 (குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231(2)) கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

***பிரிவு 254. வாதி தரப்புக்கான சாட்சியம்*** *- (1) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று நீதிபதி வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படக்கூடிய சாட்சியம் அனைத்தையும் எடுத்துக் கொள்ள முற்படுதல் வேண்டும்.*

*வரம்புரையாக இந்த உட்பிரிவின் கீழ் ஒரு சாட்சி அளிக்கும் சாட்சியம் ஒலி - ஒளி மின்னணு தகவல் சாதனங்கள் மூலம் பதிவு செய்திடல் வேண்டும்.*

*(2) பொது ஊழியர் எவரிடமும் இருந்து பெறப்படும் சாட்சியமும் ஒலி - ஒளி மின்னணு தகவல் சாதனங்கள் மூலம் பதிவு செய்திடல் வேண்டும்.*

*(3) நீதிபதி, தம் விருப்புரிமையின்படி எந்தச் சாட்சியையேனும் குறுக்குவிசாரணை செய்வதை வேறெந்தச் சாட்சி அல்லது சாட்சிகளின்*

*விசாரணை முடியும் வரை ஒத்திப் போட அனுமதிக்கலாம் அல்லது மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காகச் சாட்சி எவரையும் மீண்டும் கூப்பிடலாம்.*

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

12). மேலும், நமது மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ***AIR 2019 SUPREME COURT 721*** ***என்ற வழக்கில்,***

***In the Supreme Court of India,***
***AIR 2019 SUPREME COURT 721***
***Dated : 30.10.20218***

*State of Kerala* ...*Appellant*

*---vs---*

*Rasheed* ...*Respondent*

*Every kind of judicial discretion, whatever may be the nature of the matter in regard to which it is required to be exercised, has to be used with due care and caution. In fact, an awareness of the context in which the discretion is required to be exercised and of the reasonably foreseeable consequence so fits use, is the hall mark of a prudent exercise of judicial discretion." (Emphasis supplied) circumstances"6, or when "a very strong case"7 has been made out. However, while it is for the parties to decide the order of production and examination of witnesses in accordance with the statutory scheme, a Judge has the latitude to exercise discretion under Section231(2)of the Cr.P.C. if sufficient reasons are made out for deviating from the norm.*

என்று தெளிவுப்படுத்தியுள்ளது.

13). மேலும், மேற்கண்ட பாரதிய நாகரீக சுரக்ஷா சங்கீதா பிரிவு 254 (குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231 (2) ன் படியும் மேற்கண்ட நமது மாண்புமிகு உச்சநீதிமன்ற

தீர்ப்புரையின் படியும் பார்க்கும் போது, எந்த சாட்சியையும் குறுக்கு விசாரணை செய்வதை வேறு எந்த சாட்சி அல்லது சாட்சிகள் விசாரணை முடியும் வரை சரியான காரணம் இருக்கும் பட்சத்தில் ஒத்தி போட அனுமதிக்கலாம் என்பது தெளிவாகிறது. இந்த வழக்கில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட அ.சா.1 முதல் அ.சா.3 னை குறுக்கு விசாரணை செய்வதை மற்ற கண்ணுற்ற சாட்சிகளின் விசாரணை முடியும் வரை ஒத்தி வைக்க மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் இரு இரு தரப்பிற்கும் எவ்வித பாதிப்போ, குந்தகமோ ஏற்பட போவதில்லை. இம்மனுவை அனுமதிக்காத பட்சத்தில் மனுதாரர்கள் / எதிரிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என மனுதாரர்கள் / எதிரிகள் தரப்பில் கூறியதை கருத்திற்கொண்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

***14. முடிவில்,***

***அ). இம்மனு அனுமதிக்கப்படுகிறது.***

***ஆ). செலவுத்தொகை இல்லை.***

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு கணிணியில் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/- K. பழனிவேல்,

உதவி அமர்வுநீதிபதி,

மேட்டுப்பாளையம்.

**1). மனுதாரர் / எதிரி தரப்பு சாட்சிகள் பட்டியல் :-**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| | -- இல்லை -- | |

**2). மனுதாரர் / எதிரி தரப்பு சான்றாவணங்கள் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | | -- இல்லை -- | | |

**3). அரசு தரப்பில் சாட்சிகள்**

| வ. எண் | சாட்சி பெயர் | சாட்சிய வரிசை |
|---|---|---|
| | -- இல்லை -- | |

**4). அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வ.எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண வரிசை | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|---|
| | | - இல்லை - | | |

**ஒப்பம்/- K. பழனிவேல்,**

உதவி அமர்வு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.

Cmp.No. 2/2025. SC.No. 216/2023

11.03.2026

சீரான உத்தரவு